உத்தரபிரதேசம் லக்னோவில் நடைபெற்ற தேசிய அளவிலான வில் வித்தை போட்டியில் இரண்டு பேர் கொண்ட குழு பிரிவில் இரண்டாம் இடம் பெற்ற விழுப்புரம் தெற்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக் குழு அணித் தலைவர் வேலுஜி மகள் கவி பிரியா வனத்துறையின் அமைச்சர் முனைவர் க.பொன்முடி, விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன் கௌதமசிகாமணி ஆகியோரைச் சந்தித்து வாழ்த்துக்களைப் பெற்றார்.

கும்பகோணம் மாநகர தி.மு.க செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. சிறப்புரை!

தஞ்சாவூர்,ஜன.10-

தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மாநகர தி.மு.கழகம், வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாநகர அவைத்தலைவர் எஸ்.வாசுதேவன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் மாநகர துணைச் செயலாளர் ப்ரியம் ஜெ.சசிதரன் வரவேற்புரையாற்றினார். மாநகரக் கழக நிர்வாகிகள் எஸ்.ரவிசந்திரன், எம்.சிவானந்தம், டி.செந்தாமரை ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் செ.இராமலிங்கம், சாக்கோட்டை க.அன்பழகன் ஆகியோர் கருத்துரையாற்றினர்.

முன்னதாக கூட்டத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானங்கள் குறித்து மாநகரக் கழகச் செயலாளர் சு.ப.தமிழழகன் உரையாற்றினார்.

இதில் பொதுக்குழு உறுப்பினர் எல்.ராஜேந்திரன், மாவட்ட பொருளாளர் ஜெ.நடராஜன், பகுதிக் கழகச் செயலாளர்கள் இரா.செல்வராஜ், இரா. கல்யாணசுந்தரம், டி.வி. கிருஷ்ணமூர்த்தி, மண்டலக்குழு தலைவர்கள் கே.என்.எஸ்.ஆசைதம்பி, ஜெ.மனோகரன், பாபு இரா.நரசிம்மன், மற்றும் நிலைக்குழு தலைவர்கள், மாவட்டக் கழக பிரதிநிதிகள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள வருமாறு:

அரசியல் சட்டத்தின் தந்தை என்று போற்றப்படும், அண்ணல் அம்பேத்கர் அவர்களின் தியாகத்தை இழிவுபடுத்திய ஒன்றிய உள்துறை அமைச்சருக்கு இக்கூட்டம் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்நாட்டில் விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, திருவண்ணா மலை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் பாதிப்பை ஏற்படுத்திய ஃபெஞ்சல் புயலை நிர்வாக திறமையுடனும், நேரடி கள ஆய்வுகள் மூலமும் மிகக் கவனமாக கையாண்டு, மக்கள் குறை தீர்க்க களத்தில் நின்ற துணை முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்களுக்கும், கழக நிர்வாகிகளுக்கும், அனைவருக்கும் தலைமை தாங்கி, தானே களத்திற்குச் சென்று ஆய்வு செய்து மக்களுக்கு ஆறுதல் தெரிவித்து அவர்களின் குறைகளைத் தீர்த்து வைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட, திராவிட மாடல் அரசின் முன்கள வீரர் முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இக்கூட்டம் தனது மனமார்ந்த பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

மாநில சுயாட்சிக்கு எதிரான "ஒரே நாடு ஒரே தேர்தல்" மசோதாவிற்கு திராவிட முன்னேற்றக் கழக மற்றும் இந்தியா கூட்டணி கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதிவு செய்த கடும் எதிர்ப்பிற்கு பணிந்து நாடாளுமன்ற கூட்டுக்குழுவிற்கு இந்த மசோதாவை ஒன்றிய பா.ஜ.க. அரசு அனுப்பியிருந்தாலும் ஒரே நாடு ஒரே தேர்தல் திட்ட மசாதாவை திணிக்க முயலும் ஒன்றிய பா.ஜ.க. அரசை இக்கூட்டம் கண்டிப்பதோடு, இந்த மசாதாவை முழுமையாகக் கைவிட வேண்டுமெனவும் வலியுறுத்துகிறது.

"குலத்தொழிலை ஊக்குவிக்கும் விஸ்வகர்மா திட்டத்திற்குப் பதில் சாதிய அடிப்படையில் பாகுபாடு காட்டாத அனைத்து கைவினைஞர்களையும் உள்ளடக்கிய "கலைஞர் கைவினைத் திட்டத்தை" தொடங்கி வைத்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்கூறும் நல்லுலகமெங்கும் கொண்டாடும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முன்னெடுத்ததை முதல்நாளை தமிழ் புத்தாண்டாகவும், தமிழர் பண்பாட்டுத் திருநாளான பொங்கல் நன்னாளை சமத்துவ பொங்கலாகவும் கும்பகோணம் மாநகர தி.மு.கழகம் சார்பில் வருடம் தோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்வாண்டும் சமத்துவப் பொங்கல் விழாவை தோப்பு தெரு ராஜகோபாலசாமி கோவில் சன்னதியில் வருகிற 12.01.2025 அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10:00 மணியளவில் சிறப்பாக கொண்டாடப்படுவதென இந்த கூட்டம் தீர்மானிக்கிறது.

திராவிடமாடல் அரசின் தலைவர் - முதலமைச்சர் அவர்களின் சாதனைத் திட்டங்களை வீடு வீடாககழகநிர்வாகிகளும், கட்சித் தொண்டர்களும் எடுத்துச் சென்று எல்லோருக்கும் எல்லாம் என நடைபெற்றுவரும் அரசுக்கு "வாய்ப்பளிப்பீர் நல்லாட்சி தொடர்ந்திட" என மக்களிடம் சொல்ல வேண்டும். 2026 சட்டமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் 200 இடங்களில் ஏன் 200க்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றி பெற இன்றே புறப்படுவீர். கழக ஆட்சி வருங்காலங்களிலும் தொடர்ந்திடும் என்பதை உறுதிசெய்வீர் என்று கழக உடன்பிறப்புகளை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

முக்கடல் சங்கமிக்கும் குமரி முனையில் 'முத்தமிழறிஞர் கலைஞர்' நிறுவிய வானுயர வள்ளுவர் சிலையின் வெள்ளிவிழாவையொட்டி "பேரறிவுச் சிலை" என பெயர் சூட்டி, கடற்கரை சாலைக்கு அய்யன் திருவள்ளுவர்' சாலை என பெயர் சூட்டியும், அய்யன் திருவள்ளுவர் சிலை அமைந்துள்ள பாறைக்கும் அருகேயுள்ள விவேகானந்தர் மண்டபம் அமைந்துள்ள பாறைக்கும் இடையே இந்தியாவிலேயே முதன் முறையாக கடல் நடுவே ரூபாய் 37 கோடியில் கட்டப்பட்ட கண்ணாடி இழை பாலத்தை திறந்து வைத்த, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு இந்த கூட்டம் உளமார்ந்த பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறது.

அரசு உதவிபெறும் பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை தமிழ்வழியில் பயின்று உயர்கல்வியில் சேரும் மாணவிகளுக்கும் மாதந்தோறும் ரூ.1,000 வழங்கும் புதுமைப் பெண் திட்டத்தின் விரிவாக்கத்தை தொடங்கி வைத்து, "கல்வி இல்லாத பெண்கள் களர்நிலம்" என்றார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன். உயர்கல்வி பெறாத பெண்களே தமிழ்நாட்டில் இல்லை என்ற நிலையை உருவாக்காமல் நான் ஓய மாட்டேன், இந்தியளவில் உயர்கல்வியில் சேர்வதில் தமிழ்நாட்டுப் பெண்கள் முன்னிலையில் இருப்பதை கண்டு "Dravidian Stock"காக நான் பெருமைபடுகிறேன் என்ற இலட்சிய கொள்கை முழக்கத்தை முன்னிறுத்தி செயல்பட்டு வரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இந்த கூட்டம் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

தி.மு.கழகத் தோழர்களை தன் காந்தக் குரலில் கவர்ந்திழுத்த 'அழைக்கின்றார், அழைக்கின்றார் அண்ணா', 'கல்லக்குடி கொண்ட கருணாநிதி வாழ்கவே', 'ஓடி வருகிறான் உதயச்சூரியன்' மற்றும் 'இறைவனிடம் கையேந்துங்கள்', 'எல்லோரும் கொண்டாடுவோம்', ''நட்ட நடு கடல் மீது', 'உன் மதமா என் மதமா', போன்ற பாடல்களை பாடி தமிழ் இசைக்கும், திரை இசைக்கும் சுமார் 75 ஆண்டுகள் தொண்டாற்றிய "இசை முரசு" நாகூர் ஈ.எம்.ஹனிபா அவர்களின் பங்களிப்பை போற்றி பெருமை சேர்க்கும் வகையில், நாகப்பட்டினம் நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள நாகூர் தைக்கால் தெருவிற்கு "இசை முரசு நாகூர் ஈ.எம். ஹனிபா தெரு" என்றும், சில்லடி கடற்கரைக்குச் செல்லும் சாலையில் புதுப்பிக்கப்படும் சிறுவர் விளையாட்டுப் பூங்காவிற்கு "இசை முரசு நாகூர் ஈ.எம். ஹனிபா நூற்றாண்டு நினைவுப் பூங்கா" என்றும் பெயரிட்டு அழைக்க கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டு, அவரது புகழிற்கு பெருமை சேர்த்ததை இக்கூட்டம் நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

நவீன இந்தியப் பொருளாதாரத்தின் சிற்பி முன்னாள் இந்திய ஒன்றிய பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் மறைவிற்கும், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழனிமாணிக்கம் தயார் எஸ்.மரகதம் அம்மாள் மறைவிற்கும், ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதியின் எம்.எல்.ஏ. வும், காங்கிரஸ் மூத்த தலைவருமான ஈ.வி.கே. எஸ். இளங்கோவன் மறைவிற்கும், 15 வது வட்ட கழக முன்னாள் பிரதிநிதி செ.பாபு அவர்களின் மறைவிற்கும், முன்னாள் வட்ட கழக செயலாளரும், முன்னாள் நகர செயற்குழு உறுப்பினருமான இலக்கடை S.செல்வராஜ் மறைவிற்கும், கும்பகோணம் மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜெ.ன்.பிரபு தந்தை ஜவுளி கே.நாகநாதன் மறைவிற்கும், கும்ப கோணம் மாநகர 27 வது வட்ட கழக பிரிதிநிதி க.சரவணன் மறைவிற்கு இந்த கூட்டம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கோவை வடக்கு மாவட்டம் மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி சார்பில், கழக துணை பொதுச்செயலாளரும் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தலைமையில் தொண்டாமுத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தாளியூர் பேரூராட்சியில் அமைந்துள்ள ஆதரவற்றோர் இல்லத்தில் கேக் வெட்டி அனைவருக்கும் மதிய உணவு வழங்கியும் தாளியூர் பேரூராட்சி 5வது வார்டுக்கு உட்பட்ட மகளிருக்கு விலையில்லா சேலைகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது .வடக்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ரதிமனோகர் மற்றும் மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் ரங்கநாயகி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் தாலியூர் பேரூர் கழக செயலாளர் தண்டபாணி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் பாகமுகவர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட திமுக சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்கும் பொங்கல் விழா மற்றும் 5000 பேருக்கு நல உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி இடைக்கழி நாடு பேரூராட்சியில் வரும் 12.1.2025 அன்று மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் நடைபெற உள்ளது. இந்த நிகழ்ச்சியையொட்டி இடைக்கழி நாடு பேரூர் திமுக சார்பில் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. நிகழ்ச்சி குறித்து ஆலோசனை வழங்கினார். உடன் ஜி.க.செல்வம் எம்.பி.,பேரூர் செயலாளர் மோகன்தாஸ், மாவட்ட அவைத் தலைவர் இனியரசு, சித்தாமூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் சிற்றரசு, பேரூராட்சி தலைவர் சம்யுக்தா அய்யனார், மீனவர் அணி அமைப்பாளர் பாரத், பேரூர் அவைத்தலைவர் அருணா,பேரூர் துணை செயலாளர் ரஞ்சித் மாவட்ட பிரதிநிதி பக்தவத்சலம் ஆகியோர் உள்ளனர்.

தமிழ்த்தாய் வாழ்த்தை அவமதித்த அடாவடி ஆளுநரைத் கண்டித்து

நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!

மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் தலைமையில்!

நாகை. ஜன.10-

தமிழ்நாட்டையும், தமிழ்த்தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமானப்படுத்தி வரும் ஆளுநரை கண்டித்து நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆளுநரை காப்பாற்றும் அ.தி.மு.க., பா.ஜ.க. கள்ளக் கூட்டணிக்கும் ஆர்ப்பாட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

தமிழ்நாட்டையும், தமிழ்த்தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமானப்படுத்தும் ஆளுநரைக் கண்டித்து 7.1.2025 அன்று காலை தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என தலைமைக் கழகம் சார்பில் அறிவிக்கப்பட்டது. அதன்படி 7.1.2025 அன்று காலை 10.30 மணிக்கு நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நாகை வெளிப்பாளையம் புதிய பேருந்து நிலையம் அவுரித்திடலில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட கழகத்தினர்ஆளுநர் பதவி விலக வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினர்

கண்டன ,ஆர்ப்பாட்டத்தில் தாட்கோ தலைவர் உ.மதிவாணன், மாநில விவசாய அணி துணைத் தலைவர் எஸ்.கே.வேதரத்தினம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க. ராஜேந்திரன், ப.கோவிந்தராசன், இல.மேகநாதன், மறைமலை, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் ஆரூர்மணிவண்ணன், சோ.ரவிச்சந்திரன், கற்பகம்நீலமேகம், மாவட்டக் கழக பொருளாளர் மு. லோகநாதன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி. மனோகரன்,மாநில சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணை செயலாளர் சாகுல்ஹமீது, ஒன்றியச் கழகச் செயலாளர்கள் ஆ.தாமஸ்ஆல்வா எடிசன்,

மகா.குமார்,ஆர்.டி.எஸ். சரவணன், செல்வ.செங்குட்டுவன், கே.பழனியப்பன், சோ.பா.மலர்வண்ணன், என்.சதாசிவம், சிக்கல் என்.ஆனந்த், உதயம் வே.முருகையன், நகரக் கழகச் செயலாளர்கள் இரா.மாரிமுத்து, மா.மீ.புகழேந்தி, எம்.ஆர்.செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் கே.பாண்டியன், எல்.எஸ்.ஈ. பழனியப்பன், எஸ்.பன்னீர்செல்வம், கோசி.குமார், உமாசெந்தாமரை, இல. பழனியப்பன், எஸ்.பி.டி.சார்லஸ், பேரூர் கழகச் செயலாளர்கள் கா.அட்சயலிங்கம், மரியசார்லஸ், சி.சுப்பிர மணியன், முகமது சுல்தான்,

மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் பி.என். கார்த்தி, ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, ஆர்.துரைராசு, கேஸ் வி.செந்தில், பி.முருகானந்தம், கே.எஸ்.சாகுல் ஹமீதுராஜா, எஸ்.வி.டி. அருள், எஸ்.பால்ராஜ், ஆர்.ஆர்.குலோத்துங்கன், இளம்.சுந்தர், எஸ்.சுந்தர் த.தமயந்தி, வ.கமல், எஸ். வெற்றிசெல்வம்,

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் தி.கலையரசன், கே.சுரேஷ், எஸ்.டேனியல் சத்தியா, பன்னீர்செல்வம், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை தலைவர் இரா.தங்கதுரை, இலக்கிய அணி தலைவர் கருணாநிதி மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், பேரூராட்சி தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி உறுப்பினர்கள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

முடிவில் நாகை நகரக் கழகச் செயலாளர் இரா. மாரிமுத்து நன்றி கூறினார்.

தமிழ்நாட்டை அவமதிக்கும் ஆளுநர் ரவியைக் கண்டித்து

பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!

மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில் 2 ஆயிரம் பேர் பங்கேற்பு!

பெரம்பலூர்,ஜன. 10-

தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஆளுநர் 06.01.2024 அன்று நடந்து கொண்ட விதம் என்பது தமிழ்நாடு மக்களையும், சட்டமன்றத்தையும் அவமதித்து, பாரம்பரியமாக சட்டமன்றத்தில் நடைபெறும் நிகழ்வை மாற்றும் முயற்சியில் ஆளுநர் நடந்து கொள்ளும் விதமாக, தேசிய கீதத்தை பாடும் வரை காத்திராமல் அதை அவமதித்து விட்டு திடீர் வெளிநடப்பு செய்துள்ளார்.

ஆளுநர் உரையை வாசித்தால் அரசின் சாதனைகளை அடுக்கடுக்காக பட்டியலிட வேண்டும் என்பதால் ஒரு நாடகத்தை அறங்கேற்றி சென்றுள்ளார்.

ஒட்டு மொத்த தமிழக மக்களை அவமதித்திடும் வகையில் செயல்பட்ட தமிழ்நாடு ஆளுநர் ஆர்.ரவியைக் கண்டித்து, தலைமை கழக ஆணைக்கிணங்க, கழகத் துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி. அறிவுறுத்தலின்படி, போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆலோசனைக்கிணங்க, பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. சார்பில்,07.01.2025, (செவ்வாய்க்கிழமை), காலை 10.00 மணியளவில், பெரம்பலூர் புதிய பேருந்து நிலையத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஆளுநர் ஆர்.என்.ரவியைக் கண்டித்து வின்னதிர கோஷங்கள் எழுப்பப்பட்டது. இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில்,

மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர்பா.துரைசாமி,தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சய கோபால், வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், எஸ்.அண்ணாதுரை, பட்டுச் செல்வி ராஜேந்திரன், அழகு.நீலமேகம், ஆர்.முருகேசன்,

மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர்,நூருல்ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன்,

ஒன்றிய கழகச் செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, எம்.ராஜ்குமார், எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன்,சி.ராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் டாக்டர் செ.வல்லபன், . ஜெகதீஷ்வரன், பேரூர் கழக செயலாளர்கள் எம். வெங்கடேசன், ஆர்.ரவிச்சந்திரன், செல்வலெட்சுமி சேகர்,ஏ.எம்.ஜாகிர்உசேன் முன்னாள் பெருந்தலைவர்கள் க.ராமலிங்கம், பிரபா செல்லப்பிள்ளை, முன்னாள் துணைப் பெருந்தலைவர் எம்.ரெங்கராஜ்,

ஆர்.வேணுகோபால், து.ஆதவன்(எ) ஹரிபாஸ்கர், கே.ஜி.மாரிக்கண்ணன், மாவட்ட இளைஞர் அணி

அ.அப்துல்கரீம், வ.சுப்ரமணியன், டி.ஆர்.சிவசங்கர், ஆர்.அருண், மா.பிரபாகரன், ஏ.எம்.கே.கரிகாலன், பாரி(எ)அப்துல் பாரூக், சு. தங்கராசு, மகாதேவி ஜெயபால், ஆர்.ரெங்கசாமி, கே.கே.எம்.குமார், எ.ரசூல்அகமது, டாக்டர் அ.கருணாநிதி, கவிஞர்.முத்தரசன், க.ரமேஷ், வெ.கார்மேகம், ஆ. இராசா. எம்.பி.உதவியாளர்கள் பி.அறிவுச்செல்வன், சிதம்பரம், தங்க.கமல், மாவட்ட எம்.மணிவாசகம், தி.இராசா, ஆர்.குமார்,வெ. ரமேஷ், பா.ரினோ பாஸ்டின், வி.கே.ராஜேந்திரன், தம்பை.தர்மராஜ், ந. முத்துச்செல்வன், பாத்திமா செல்வராஜ், தனலட்சுமி,

அங்கயற்கண்ணி, விஜி புளொரா ரெஜி, புஷ்பராணி, செல்வராணி, கலையரசி, வலை தள பொறுப்பாளர்கள் ஜெயப்பிரியா, முருகேஸ்வரி, புஷ்பவள்ளி ராஜேந்திரன், தமிழரசி, சாந்தி, சுதா, நட்சத்திரம், பரமேஸ்வரி,கன்னகி, சுமதி, வலை தள பொறுப்பாளர்கள் சங்கீதா,கண்ணகி, மரவத்தம் முருகேசன், ரா. சிவா, வழக்கறிஞர் கண்ணன், மூங்கில்பாடி புகழேந்தி உள்ளிட்ட இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். தங்க. கமல் நன்றியுரையாற்றினார்.

விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறியாளர் அணி ஆலோசனைக் கூட்டம் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் பொன்.கௌதம சிகாமணி தலைமையில் பொறியாளர் அணி மாநிலத் துணைச் செயலாளரும் மண்டல பொறுப்பாளர் சி.பிரதீப் முன்னிலையில் நடைபெற்றது. பொறியாளர் அணி அமைப்பாளர் புகழ் செல்வகுமார் வரவேற்புரையாற்றினார்.சுரேஷ் நன்றி கூறினார். கூட்டத்தில் ஒன்றிய நகர பேரூர் கழக அளவில் பொறியாளர் அணி நிர்வாகிகள் நியமனம் செய்யவும் மற்றும் அதிக அளவில் உறுப்பினர் சேர்க்கை செய்ய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதில் அரக்கண்டலூர் ஒன்றிய செயலாளர் ஏ. பிரபு,வளவனூர் பேரூராட்சி செயலாளர் பா.ஜீவா,மாவட்ட பொறியாளர் அணி துணைத் தலைவர் வி. கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர்கள் துரை ஸ்டாலின்,எம்.பிரசாத், டி.டி. செந்தில்குமார், ஏ. ரிகன் ராஜ் பங்கேற்றனர்.